1974 மார்ச் 9]

THIRU N. DENNIS: May I know about their employment opportunities?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதில் இந்தியன் கௌன்ஸில் பார் சைல்ட் வெல்பேர் நடத்துவதில் 515 பேர்கள் ஏற்கெனவே பயிற்சி முடித்து 455 பேர்கள் இப்போது பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். 1,840 காப்பகங்களில், எஸ்.வி. நகரத்திலும், டி. கல்லுப்பட்டியிலும் பயிற்சி பெற்ற அத்தனை பேருக்குமே வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. படித்து வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு சமீபத்தில் எடுத்த க்ராஷ் ப்ரோக்ராம் மூலம் 600 நிலையங்களில் ஒவ்வொரு நிலையத்திலும் ஐம்பது பேர்கள், ஐம்பது பேர்கள் என்று இரண்டாகப் பிரித்து அவர்களுக்கு நிலையங்களில் பயிற்சி பெற வேண்டுமென்று புதிய திட்டம் துவக்கப்பட்டு, இதில் 320 நபர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவில் வேலை வாய்ப்பு தரப்படும்.

THIRU B. VENKATASWAMI: The present salary of Balasevikas is very low. I think the Government is giving only Rs. 100. Will the Hon. Minister see that their pay is enhanced?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தியன் கவுன்ஸில் ஃபார் சைல்ட் வெல்பேர் என்ற நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 210-5-250-10-300 என்ற வகையில் சம்பளம் தரப்படுகிறது. மூன்று மாதங்கள் ட்ரெய்னிங் எடுத்து எஸ். வி. நகரத்திலுள்ள, டி. கல்லுப்பட்டியிலும் பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் ரூ. 50 தரப்பட்டு வருகிறது. அவர்கள் செய்கிற வேலைக்கு அது போதும் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களை மேம்படுத்தல்.

*341 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வயல்களில் படிந்துள்ள மண்ணை அகற்றுவதற்காகும் செலவினை அரசே ஏற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதுவரையில் இந்தப் பணிக்காக அரசு எவ்வளவு தொகை செலவிட்டிருக்கிறது? எந்தெந்தப் பகுதிகளில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தென்னாற்காடு 8559.50 ஏக்கர், ரூ. 71,96,460.

கோயம்புத்தூர் 519.25 ஏக்கர், ரூ. 3,33,000.

சேலம் 680.93 ஏக்கர், ரூ. 3,93,660.

தருமபுரி 272.12 ஏக்கர், ரூ. 1,68,300.

திருச்சி 282.78 ஏக்கர், ரூ. 2,13,060.

தஞ்சாவூர் 54.46 ஏக்கர், ரூ. 83,92,500.

ஆக மொத்தம் 10,359.04 ஏக்கர், ரூ. 83,92,500.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இங்கே சில விவரங்களைக் கொடுத்தார்கள் வடாற்காடு மாவட்டத்தில் செங்கம் தாலுக்காவில் பல்லாயிரக்கணக்கான நிலம் அந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சாதாகிருஷ்ணன் அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் அது குறித்து விண்ணப்பித்து இருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகக் குறிப்பிடவில்லை. அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த நிலங்களைச் சரிப்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பட்டியலில் வடாற்காடு வரவில்லை என்பதால்தான் அது பற்றிக் குறிப்பிடவில்லை. மழையாலும்,

---

@ 744-745-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்

1974 மார்ச் 9] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கடும்புயலாலும் பாதிக்கப்பட்ட பட்டியலில் சென்னை, தென்னுற்காடு, திருச்சி, சேலம், செங்கற்பட்டு, வடாற்காடு குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. அதுபற்றிய புள்ளி விவரம் தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. எம். இராதாகிருஷ்ணன் : தலைவரவர்களே, சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து நிரம்பிய தண்ணீர் தென்பெண்ணை ஆறு வழியே தென்னுற்காடு மாவட்டத்திற்குப் பாய்ந்து கொண்டிருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் வழிந்து அந்தப் பகுதியெல்லாம் 1 அடி 2 அடி மணல் மேடிட்டுக் கொண்டிருக்கிறது. பல முறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியும் இது வரை அது பற்றி கவனிக்கப் படவில்லை. அந்தப் பகுதி மக்கள் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரை நொந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக அந்த வேலையைச் செய்து தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருப்பதாக இரண்டு உறுப்பினர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் விவரம் இல்லை என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டு, பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு கணக்கெடுத்து இருக்கிறதா? பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா? இப்போது இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. அப்படி விவரம் எடுத்து இருந்தால் எல்லா இடங்களையும் சரி செய்வதற்கு அரசு வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கெனவே என்னிடத்தில் உள்ள குறிப்பிலிருந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைக் குறிப்பிட்டேன். அதிலே வடாற்காடு மாவட்டமும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அது பற்றிய தகவல்கள்தான் தற்போது இல்லை. அதைப் பார்த்துப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.